Mohini allowance

* 222 Q.—Thiru K. VINAYAKAM
Thiru N. KASIRAMAN } Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the action taken by the Government regarding the revision of "Mohini allowance" to certain temples, as recommended by the Committee on Estimates?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : புதிதாக அமைக்கப்பட்ட இந்து சமய-அறக்கட்டளைகள் (நிர்வாகத்) துறை ஆலோசனைக்குழு கோயில்களுக்கு அளிக்கப்படும் மோகினிப் படியைத் திருத்தியமைக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தது. அரசு இந்தக் கருத்தை ஆராய்ந்து பார்த்து, மோகினிப் படியை உயர்த்தவேண்டாம் என்று முடிவு செய்தது. மதிப்பீட்டுக் குழுவும் பின்னர் இதற்கொப்ப ஒரு கருத்தைக் கூறியது. வருவாய்த் துறை வாரியத்தைக் கலந்தாலோசித்து அரசு தற்போது இதனை ஆராய்ந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மோகினிப் படி என்றால் என்ன என்று விளக்கவேண்டும்.

Thiru K. VINAYAKAM : Sir, on a point of order. The Chair can never put a question.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் அதை விளக்கிவிடும்படியாகத்தான் சொன்னேன்.

திரு. கே. விநாயகம்: இந்தப்படிக்கு மோகினி, ரம்பை, ஊர்வசி என்று பெயர் எப்படி வந்தது. இந்த மோகினி எங்கே இருந்து வந்தாள்? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தோற்றத்திற்கு இது மற்ற கற்பனையைத் தூண்டிவிட்டாலும் தேவாலயங்களுக்குக் கொடுக்கப்படுகிற மானியமாகும். 19-ஆம் நூற்றாண்டில் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை வெள்ளைக்கார அரசாங்கம் எடுத்துக்கொண்டபோது, அதற்கு ஈடுகட்ட இப்படி மானியம் கொடுத்து வந்தார்கள். அப்போதிருந்த விலைவாசிகள் நிலைமை, ரூபாயின் மதிப்பு இவற்றைக்கொண்டு 19-ஆம் நூற்றாண்டில் இந்த மானியத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. இப்போது அப்படிக் கொடுப்பது என்பதில்லை. எனக்குத் தோன்றுவது. ஸ்ரீரங்கம் ரங்கநாதர் மோகினிவேஷம் போட்டுக் கொண்டதன் அடிப்படையில் ஒரு இரவு அந்த சுவாமிக்கு அப்படி வேஷம் போட்டே உற்சவம் நடத்துகிறார்கள். அந்த அடிப்படையில் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட இந்த மானியம் மோகினி மானியம் என்று பெயர் பெற்றிருக்கக்கூடும். பெண் யாருக்கும் கொடுக்கப்படுகிற மானியம் அல்ல இது. தேவாலயங்களுக்குக் கொடுக்கப்படுகிற மானியம்.

திரு. நா. காசிராமன்: இப்போது பல கோயில்களில் செலவுக்குப் பணம் இல்லை. குத்தகை பாக்கியும் விழுந்துவிடுகிறது. வசூல் செய்ய முடியவில்லை. ஆகவே மோகினி மானியப் பணத்தைக் கோயில்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அறநிலையக் கட்டளை இலாக்கா இதைக் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்ததற்கு முன்பு இருந்த நிதி இலாக்கா காரியதரிசியும் இப்போதுள்ளவரும் தேவையில்லை என்று எழுதிவிட்டார்கள். இப்படி மோகினி மானியம் என்று கொடுக்க ஆரம்பித்தால் அதற்கு முடிவே இருக்காது என்று தள்ளிவிட்டார்கள். ஸ்ரீரங்கநாதர் கோயிலில் இருந்து அவை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வந்தது. திரு டி.எம். நாராயணசாமி பிள்ளை அவர்களைப போட்டு இதைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டுமென்ற நிலைமை கூட இருந்தது. ஸ்ரீரங்கநாதர் கோயிலில் திரும்ப அதை வற்புறுத்த

வில்லை. இருந்தாலும் எஸ்டிமேட் கமிட்டிகூட இதுபற்றி சிபார்சு செய் திருப்பதால் இதுபற்றி வருவாய்த்துறையுடன் அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது.

திரு கெ. இர. ஞானசம்பந்தன்: மோகினிப் பணம் என்று இருப்பது போல ரம்பைப் பணம், ஊர்வசிப் பணம் என்று இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உறுப்பினருடைய கற்பனையை விரித்துக்கொண்டே போவது நல்லதல்ல.

திரு என். மருதாசலம்: மோகினிப் படி எந்த எந்தக் கோயில்களுக் குக் கொடுக்கப்பட்டு வருகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதுபற்றிய விவரம் தற் போது இல்லை.

திரு. க. இராமமூர்த்தி: ஸ்ரீரங்கநாதர் மோகினி வேஷம் போட்டுக் கொண்டதால் மோகினிப் படி கொடுக்கப்படுகிறது என்பதனுல் இதை வைஷ்ணவக் கோயில்களுக்கு மட்டும் கொடுப்பதுபற்றி சர்க்கார் ஆலோ சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: ரங்கநாதர் பெண் வேஷம் போட்டு சிவனைத்தான் மயக்கினர். ஆகவே சிவன் கோயில்களுக்கும் கொடுக்கலாம். (சிரிப்பு.)

தீ விபத்துக்களினுல் இழப்பு

*223—வினு. **திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா ?

(அ) 1957 முதல் 1966 வரை நமது ராஜ்யத்தில் தீப்பிடித்துபற்றி எரிவதன் மூலமாக வருடா வருடம் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது?

(இ) அதற்காக சர்க்கார் எவ்வளவு நஷ்ட ஈடு கொடுத்தது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) & (இ) 1957-ம் ஆண்டிலி ருந்து 1966-ம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகளுக்கு, தீ விபத்துக் களின் காரணமாக இழக்கப்பட்ட தொகையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட இடர் உதவித் தொகையும்பற்றிய புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

ஆண்டு.	தீ விபத்துக்களின் காரண மாக இழக்கப்பட்ட தொகை.	அளிக்கப்பட்ட இடர் உதவித் தொகை.
	ரூ.	ரூ.
1957	12,55,346	1,96,569
1958	6,84,074	1,25,917
1959	7,25,361	2,77,743
1960	11,04,392	4,06,893
1961	10,20,182	3,55,428
1962	12,54,688	2,97,852
1963	16 01,411	3,22,230
1964	20,74,599	3,68,448
1965	53,18,343	5,70,512
1966	27,79,158	3,56,061
மொத்தம்..	1,78,17,554	32,78,653